# இன்றைய இறைவார்த்தை

# 02-12-2014

**திருவருகைக்காலம் – 1ஆம் வாரம் – செவ்வாய்க்கிழமை**
**முதலாம் ஆண்டு**

**முதல் வாசகம்:**

ஆண்டவரின் ஆவி அவர்மேல் தங்கியிருக்கும்.

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்: **11 : 1 – 10**

ஆண்டவருக்குரிய நாளில் ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர் விடும். அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனி தரும். ஆண்டவரின் ஆவி அவர்மேல் தங்கியிருக்கும் ஞானம், மெய்யுணர்வு, அறிவுரைத் திறன், ஆற்றல், நுண்மதி, ஆண்டவரைப்பற்றிய அச்ச உணர்வு ~ இவற்றை அந்த ஆவி அவருக்கு அருளும். அவரும் ஆண்டவருக்கு அஞ்சி நடப்பதில் மகிழ்ந்திருப்பார்.

கண் கண்டதைக் கொண்டு மட்டும் அவர் நீதி வழங்கார். காதால் கேட்டதைக் கொண்டு மட்டும் அவர் தீர்ப்புச் செய்யார். நேர்மையோடு ஏழைகளுக்கு நீதி வழங்குவார். நடுநிலையோடு நாட்டின் எளியோரது வழக்கை விசாரிப்பார். வார்த்தை எனும் கோலினால் கொடியவரை அடிப்பார். உதட்டில் எழும் மூச்சினால் தீயோரை அழிப்பார். நேர்மை அவருக்கு அரைக்கச்சை. உண்மை அவருக்கு இடைக்கச்சை.

அந்நாளில், ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும். அக்குட்டியோடு சிறுத்தைப்புலி படுத்துக்கொள்ளும். கன்றும், சிங்கக்குட்டியும், கொழுத்த காளையும் கூடி வாழும். பச்சிளம் குழந்தை அவற்றை நடத்திச் செல்லும். பசுவும் கரடியும் ஒன்றாய் மேயும். அவற்றின் குட்டிகள் சேர்ந்து படுத்துக்கிடக்கும். சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையில் விளையாடும். பால்குடி மறந்த பிள்ளை கட்டுவிரியன் வளையினுள் தன் கையை விடும்.

என் திருமலை முழுவதிலும் தீமை செய்வார் எவருமில்லை. கேடு விளைவிப்பார் யாருமில்லை. ஏனெனில், கடல் தண்ணீரால் நிறைந்திருக்கிறது போல, மண்ணுலகம் ஆண்டவராம் என்னைப் பற்றிய அறிவால் நிறைந்திருக்கும். அந்நாளில், மக்களினங்களுக்குச் சின்னமாய் விளங்கும் ஈசாயின் வேரைப் பிற இனத்தார் தேடி வருவார்கள். அவர் இளைப்பாறும் இடம் மாட்சி நிறைந்ததாக இருக்கும்.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவா! உமக்கு நன்றி.

**பதிலுரைப்பாடல்:**

திருப்பாடல்கள்: **72 : 1–2, 7–8, 12–13, 17** (பல்லவி **7)**

பல்லவி: ஆண்டவருடைய காலத்தில் நீதியும் சமாதானமும் தழைத்தோங்கும்.

1. கடவுளே, அரசருக்கு உமது நீதித்தீர்ப்பை வழங்கும் ஆற்றலை அளியும். அரச மைந்தரிடம் உமது நீதி விளங்கச் செய்யும். அவர் உம் மக்களை நீதியோடு ஆள்வாராக! உம்முடையவரான எளியோர்க்கு நீதித்தீர்ப்பு வழங்குவாராக! பல்லவி

2. அவர் காலத்தில் நீதி தழைத்தோங்குவதாக. நிலா உள்ள வரையில் மிகுந்த சமாதானம் நிலவுவதாக. ஒரு கடலிலிருந்து அடுத்த கடல்வரைக்கும் அவர் ஆட்சி செலுத்துவார். பேராற்றிலிருந்து உலகின் எல்லைவரைக்கும் அவர் அரசாள்வார். பல்லவி

3. தம்மை நோக்கி மன்றாடும் ஏழைகளையும் திக்கற்ற எளியோரையும் அவர் விடுவிப்பார். வறியோர்க்கும் ஏழைகட்கும் அவர் இரக்கம் காட்டுவார். ஏழைகளின் உயிரைக் காப்பாற்றுவார். பல்லவி

4. அவர் பெயர் என்றென்றும் நிலைத்திருப்பதாக! கதிரவன் உள்ளவரையில் அவர் பெயர் நிலைப்பதாக! அவர் மூலம் மனிதர் ஆசிபெற விழைவராக! எல்லா நாட்டினரும் அவரை நற்பேறு பெற்றவரென வாழ்த்துவராக! பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:** திருப்பாடல்கள் **80 : 3**

அல்லேலூயா, அல்லேலூயா!

இதோ! நம் ஆண்டவர் வல்லமையுடன் வருவார் தம் ஊழியரின் கண்களுக்கு ஒளி தருவார். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

இயேசு தூய ஆவியால் பேருவகையடைகிறார்.

தூய லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: **10 : 21 – 24**

அக்காலத்தில் இயேசு தூய ஆவியால் பேருவகையடைந்து, “தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், தந்தையே, இதுவே உமது

திருவுளம்'' என்றார். ''என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார். தந்தை யாரென்று மகனுக்குத் தெரியும் மகன் யாருக்கு வெளிப்படுத்த விரும்புகிறாரோ அவருக்கும் தெரியும். வேறு எவரும் தந்தையை அறியார்'' என்று கூறினார்.

பின்பு அவர் தம் சீடர் பக்கம் திரும்பி அவர்களிடம் தனியாக, ''நீங்கள் காண்பவற்றைக் காணும் வாய்ப்புப் பெற்றோர் பேறுபெற்றோர். ஏனெனில் பல இறைவாக்கினர்களும் அரசர்களும் நீங்கள் காண்பவற்றைக் காண விரும்பினார்கள். ஆனால், அவர்கள் காணவில்லை. நீங்கள் கேட்பவற்றைக் கேட்க விரும்பினார்கள் ஆனால் அவர்கள் கேட்கவில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன்'' என்று கூறினார்.

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.

**சிந்தனை:**

இன்றைய வாசகம் மூன்று சிந்தனைகளைத் தருகிறது. முதல் சிந்தனை, எளிமையைப்பற்றியது. கடவுளின் திட்டத்தை ஞானிகளும், அறிஞர்களும் அறிந்துகொள்ளவில்லை. அவர்களால் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. மாறாக, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தப்பட்டது. குழந்தைகள் எதையும் திறந்த மனதோடு, இருப்பதை இருப்பதாகப்பார்ப்பவர்கள். எந்த ஒரு முன்சார்பு எண்ணத்தையும் வைத்துக்கொள்ளாதவர்கள். எளியவர்கள். அவர்களுக்குத்தான் கடவுளின் திட்டம் வெளிப்படுத்தப்படுகிறது. அர்னால்ட் பென்னட் என்கிற அறிஞர் சொல்வார்: ஒரு சிறந்த புத்தகம் எழுத வேண்டுமென்றால், நிகழ்வுகளை குழந்தையின் பார்வையில் பார்க்க வேண்டும். அது முற்றிலும் உண்மையானது. பெரியவர்களாகிய நாம் பலவித முன்சார்பு எண்ணங்களால் சிறைப்பிடிக்கப்பட்டு, நிகழ்வுகளை எளிமையாகக்காணாமல், முரண்பாடுகளோடு பார்க்கிறோம். அது தவறான பார்வை.

இயேசுவுக்கும் தந்தைக்குமான தனித்துவமிக்க உறவை இங்கே நாம் பார்க்கிறோம். எனவேதான், யோவான் நற்செய்தயாளர் (யோவான் 1: 14) வார்த்தை மனுவுருவானார் என்று எழுதுகிறார். 10:31ல் இயேசு சொல்கிறார்: ''நானும் தந்தையும் ஒன்றாக இருக்கிறோம்.'' 14:9ல் பார்க்கிறோம்: ''என்னைக்காண்பது தந்தையைக் காண்பது ஆகும்.'' ஆக, இயேசுவில் நாம் தந்தையின் குணநலன்களான, பரிவு, அன்பு, மன்னிப்பு, இரக்கம் போன்ற பண்புகளைப்பார்க்கிறோம். இயேசு தந்தையைப்பிரதிபலிப்பவராக இருக்கிறார். கடவுளின் சாயலில் படைக்கப்பட்டிருக்கிற நாமும் கடவுளை நம் வாழ்வில் பிரதிபலிக்க வேண்டும்.

வரலாற்றை நிறைவு இயேசுகிறிஸ்து தான். இன்றைய நற்செய்தியின் 23 மற்றும் 24ல் இதைப் பற்றி தான் இயேசு கூறுகிறார். இறைவாக்கினர்களும், போதகர்களும் தன்னைப்பற்றி தான் முன்னுரைத்தார்கள் என்றும், அவர்களின் மறைநூல் வாக்கை தான்தான் நிறைவேற்றியதாக இயேசு கூறுகிறார். இந்த வரலாறு இயேசுவில் தான் நிறைவடையும். இந்த வரலாறு நிறைவடைவதும் இயேசுவில் தான். இயேசுதான் நாம் அடைய வேண்டிய இலக்கு. இயேசுவை பின்தொடர்வோம். அவரில் நமது முழுநம்பிக்கையை வைப்போம்.

**********